# பெண்களும் புரட்சியும்



தமிழீழ தேசிய விடுதலைப்
போராட்டத்தில் பெண்களின் பங்கு

# பெண்களும் புரட்சியும்

## தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு

எழுதியவர்

அடேல் பாலசிங்கம்

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

அரசியற் குழு

தமிழீழ விடுதலைப்புலிகள்

வெளியீடு : 7
முதற்பதிப்பு : பிப்ரவரி 1984
விலை ரூபா 3

இந்நூலின் அட்டைப்படம் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் எரித்திரியப் பெண் போராளிகளைச் சித்திரிக்கிறது.

பின் அட்டையில் பொலிசாரியோ கொரில்லாப் பெண்மணி காட்சியளிக்கிறார்.



அநியாயான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்
கைது செய்யப்பட்டு சிறையில் வாடும்
தமிழீழ விடுதலைப் போராளி

**நிர்மலா நித்தியானந்தனுக்கு**

இந்த நூல் காணிக்கை

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# உள்ளடக்கம்

*முன்னுரை*

*முதலாவது பகுதி*

***பெண்களும் தேசிய விடுதலைப் போராட்டமும்*** பக் 9

தேசிய விடுதலை இயக்கங்கள்
தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெண்கள்
போராட்டத்தில் ஒரு போராட்டம்
சமூக அழுத்தங்கள்
போர்க்களத்தில் வீரகாவியம்
புரட்சியில் புரட்சி
மகத்தான வெற்றிகள்

***இரண்டாவது பகுதி***

***தமிழ்ப் பெண்களும் தமிழீழ தேசிய போராட்டமும்*** பக் 31

தேசிய ஒடுக்கு முறையும் தமிழ்ப்பெண்களும்
இனவெறிக் கொடுமையும், கற்பழிப்பும்
இருதுருவ ஒடுக்குமுறை
சுரண்டப்படும் தொழிலாளிகளாகப் பெண்கள்
வீட்டு ஊழியம்
சீதனம் :
பெண்களைச் சிறுமைப்படுத்தும் ஒரு நடைமுறை
நாம் செய்ய வேண்டியது என்ன?

மேற்கோள் பக் 46
உசாத்துணை

# முன்னுரை

இது புரட்சிகளின் யுகம்; வெகுசன எழுச்சிகளின் சகாப்தம்; இக் காலகட்டத்தில், உலகளாவிய ரீதியில், ஒடுக்கப்படும் மக்கள் வரலாறு படைக்கும் புரட்சிப் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். தேசிய சுதந்திரமும், சமூக விடுதலையுமே இப்போராட்டங்களின் பிரதான இலட்சியங்களாக இருந்து வருகின்றன. இந்தப் புரட்சிப் போராட்டங்களில் குதித்துள்ள மக்களினத்தில் சரி பாதியினர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தாமும் சுதந்திரமான மனிதப் பிறவிகள், சமத்துவ உரிமையுடைய சமூக ஜீவிகள் என்ற ரீதியில், தமது முழுமையான மனிதத்தன்மையை நிறைவுகொள்ளும் நோக்கில் பெண்களும் இன்று போராட்டகளத்தில் குதித்துவருகின்றனர். பழமைவாத, பாரம்பரிய மரபுகளால் திணிக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக, உற்பத்தி உறவுகளிலிருந்து கிளைவிடும் சுரண்டல் முறைகளுக்கு எதிராக, காலனிய, ஏகாதிபத்திய, இனவாத சக்திகளுக்கு எதிராக, பெண்ணினம் இன்று போர் தொடுத்து நிற்கிறது. சுதந்திரத்திற்காக, சமத்துவத்திற்காக, தர்மத்திற்காக இவர்கள் எழுப்பும் போர்க் குரலானது இன்று உலகெங்கும் எதிரொலித்தவண்ணம் இருக்கிறது. இந்த விடுதலை எழுச்சிக்குரலை எந்தவொரு சக்தியாலும் நசுக்கிவிட முடியாது.

பெண்ணினம் பங்குபற்றிவரும் பலவகைப்பட்ட சமூக, அரசியல் போராட்ட வடிவங்கள் பற்றி இந்த சிறிய நூலில் விபரிப்பது இயலாத காரியம். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் பரந்துபட்டவை; பல்வகைப் பட்டவை; சிக்கலானவை. எனவே போராட்டத்தின் ஒரு அரங்கில் மட்டுமே நம்முடைய கவனத்தைச் செலுத்துகிறோம். இது, தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெண்களின் பங்குபற்றியது.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

சனநாயக, சமாதான போர் யுக்திகளில் மக்கள் நம்பிக்கை இழந்து, தாங்கொணு ஒடுக்குமுறையை எதிர் கொண்டு போராட வேறு வழியில்லாதபோது ஆயுதப் போராட்ட வடிவம் தலைதூக்குவது ஒரு சரித்திர நியதியாகிவிடுகிறது. உலக தேசிய விடுதலைப் போராட்டங்கள் பகரும் உண்மை இது. எந்தவொரு தேசிய வெகுசனத்திலும் பெண்களும் சரி பாதியினர் என்பதால், தேசிய விடுதலைப் போரில்—அதாவது ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டம் உட்பட சகல நிலைகளிலும், பெண்களின் முழுமையான ஈடுபாடு அத்தியாவசியமாகிறது. தேசிய போராட்டங்களில் ஆண்கள் பங்குபற்றுவது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படும்விவகாரம். இந்த பங்களிப்பினை புரட்சிகர செயல்பாடு எனவும் போற்றுகிருர்கள்! ஆனுல் ஆண்களைப் போன்று அதே இலட்சியவுறுதியும், புரட்சியுணர்வும் கொண்ட பெண்கள் தேசிய விடுதலைப் போராட்ட களத்தில் புகுவதற்கு பெரும் இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. எந்தவொரு போராட்டத்திலும் பங்குகொள்ளும் சம உரிமை பெண்களுக்கு உண்டு. இதனுல் அவர்கள் இயல்பாகவே போராட்டத்தில் சம பங்காளிகளாக ஏற்றுக கொள்ளப்பட வேண்டும். ஆனுல் அப்படி நடைபெறுவதில்லை. மாருக, தேசிய சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொள்ள அவர்கள் ஒரு போராட்டமே நடத்தவேண்டியிருக்கிறது. நாட்டின் சுதந்திரத்திலும் சமுதாயப் புரட்சியிலும் அவர்கள் கொண்டிருக்கும் இலட்சியப் பற்றுனது, பாலுறவிலும் (ஆண்-பெண் உறவில்) பாரபட்சம் காட்டும் பழமைவாத சமுதாயத்தால் சந்தேகக்கண் கொண்டு விமர்சிக்கப்படுகிறது. புரட்சிப் போராட்டங்களில் பங்குபற்ற பெண்கள் எழுச்சி கொண்டபோதெல்லாம் அவர்கள் சிறுமைப்படுத்தப்பட்டனர்; நிந்திக்கப்பட்டனர்; அவமானத்திற்கு ஆளாகினர். ஆனுல் இந்த சோதனைகளை எல்லாம் சாதனைகளாக மாற்றி, தாமும் ஒரு புரட்சிகர சமூக சக்தி என்பதனை அவர்கள் நிருபிக்க

தவறவில்லை. புரட்சி அரசியலில் புகுந்து கொண்ட பெண்கள் தங்கள் செயற்திறத்தினால் பாரம்பரிய வரையறைகளையும், பழமை வாதக் கருத்துக்களையும் தகர்த்தெறிந்தனர். புரட்சிப் போராட்டங்களில் பெண்களின் பங்களிப்பானது, இதுவரை ஏற்றுக் கொள்ளப்படாதிருந்த அவர்களது தகைமையை, சமூகத்தில் அவர்களது முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிரூபித்துக்காட்டியது. இதனால் இன்றைய பெண் போராளிகள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது; ஒரு புதிய வலிமை தோன்றியிருக்கிறது; தமது தகுதிபற்றி ஒரு தன்மான உணர்வு தளைத்திருக்கிறது. ஆகவே பெண்ணினத்தின் விழிப்புணர்வுக்கும், செயற்பாட்டிற்கும் தேசிய விடுதலைப்போராட்டங்கள் ஒரு அரங்கமாக அமைந்திருக்கின்றன. நாட்டின் விடுதலைக்கும் சமூதாயத்தின் மாற்றத்திற்கும் பெண்களின் பங்களிப்பும் பெண்மை பற்றிய விழிப்புணர்வும் அத்தியாவசியமாகிறது. தேசியப் புரட்சி சக்திகளோடு இணைந்து, பெண் ஒடுக்குமுறை அமைப்புகளுக்கு எதிராகப் பெண்ணினம் போர் தொடுக்க வேண்டும். இவ்விதம் பெண்களும் புரட்சியில் பங்கு கொள்ளும் போதுதான் தேசிய விடுதலைக்கான போராட்டம் பரந்து பலமடையும்; அப்பொழுது தான் புரட்சிகரமான சமுதாய சுபீட்சத்திற்கும் வழி பிறக்கும்.

தமிழ் ஈழப் பெண்களுக்காக இப் பிரசுரம் எழுதப்பட்டிருக்கிறது. இதன் நோக்கம் மூன்று. முதலாவதாக, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கு கொள்வது நாட்டின்வெற்றிக்கு அத்தியாவசியமானது என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறுவது. இரண்டாவதாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பானது அவர்களது சமூக விடுதலைக்கு முக்கியமானது என்பதை வலியுறுத்துவது. தமிழீழ சுதந்திர போராட்டமானது முற்போக்கான புரட்சிகரமான தன்மைகளைக் கொண்டிருப்பதால் இப்போராட்டம் பெண்களின் பங்களிப்பிற்கு



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

ஒரு களமாக அமைகிறது. இப்போர்க் களத்தில் குதித்து, தம்மை அணிசேர்த்து, தமதுபிரச்சனைகளை எடுத்துரைத்து: தம்மீது திணிக்கப்படும் ஒடுக்குதலையும் சுரண்டுதலையும், எதிர்த்துப் போராட பெண்களுக்கு வாய்ப்பு பிறக்கிறது. மூன்றாவதாக, ஒடுக்கப்படும் மக்களினத்துடன், போராடும் பெண்ணினத்துடன் ஒரு ஒற்றுமையுணர்வை, புரட்சிகர தோழமையுணர்வை எமது பெண் சமூகத்தில் தோற்ற செய்வது.

## முதலாவது பகுதி

# பெண்களும் தேசிய விடுதலைப் போராட்டமும்

### தேசிய விடுதலை இயக்கங்கள்

இன்றைய காலகட்டத்தில் கிளர்ந்துள்ள தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெரும்பாலானவை மூன்ருவது உலகத்தில் நடைபெறுகின்றன. காலனித்துவம், நவீன காலனித்துவம், ஏகாதிபத்தியம், இனவாதம் ஆகிய சக்திகளினுல் தமது நாடுகள் சுரண்டப்படுவதற்கும், சூறையாடப்படுவதற்கும் எதிராக ஒடுக்கப்படும் மக்கள் ஒன்று திரண்டெழுந்து புரட்சிகர விடுதலைப் போராட்டங்களில் குதித்திருக்கிருர்கள். இந்தத் தேசிய விடுதலை இயக்கங்கள் போலியான தேசிய கௌரவத்தின் அடிப்படையில் தோற்றம் கொண்டவை அல்ல. அன்றிக் கடந்த கால தேசீயப்பெருமைகளை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக தோற்றியவையும் அல்ல. இவை தாங்கொணு தேசிய ஒடுக்குமுறையாலும், சுரண்டல் முறையாலும் எழுந்த நிதர்சன வாழ்வுநிலைகளிலிருந்து வேர் கொண்டு வளர்ந்தவை. பல்லாண்டு காலம் நீடித்த மிருகத்தனமான அடக்குமுறை காரணமாய் ஒடுக்கப்படும் உலகில் வெகுஜன எழுச்சிகள் வெடித்துக் கிளம்பியுள்ளன. அழிவுக்கு ஆளாகியிருக்கும் தங்கள் மொழி, கலாசாரம், தங்கள் பாரம்பரிய நிலங்கள், தங்கள் தேசிய தனித்தன்மை-இவற்றையெல்லாம் மீளப்பெற இந்நாடுகள் புரட்சிகர விடுதலைப் போராட்டங்களில் குதிக்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

தேசிய சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே இத் தேசிய விடுதலைப் போராட்டங்

கள் அனைத்தும் அமையப் பெற்றிருக்கின்றன. இது சர்வ தேச ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் தத்துவம். ஒரு சுதந்திரமான, இறைமையுடைய அரசை நிறுவும் உரிமை, அதாவது தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் உரிமை ஒரு தேசிய இனத்திற்கு உண்டு என்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. தேசிய விடுதலைப் போராட்டங்களின் தேசியத் தன்மைக்கு வடிவம் கொடுப்பது இத்தத்துவமாகும். இதன் அடிப்படையில் தேசியவுணர்வானது ஒருவலுமிக்க புரட்சிகர சக்தியாக உருப்பெற்றிருக்கிறது.

இத்தேசாபிமான உணர்வை மையமாகக்கொண்டு, இன்றைய விடுதலை இயக்கங்கள், சகல பிரிவுகளுமான வெகுசனத்தை, இன ரீதியாக ஒடுக்கப்படும் மக்கள் என்ற ரீதியில் அணிதிரட்ட ஏதுவாக இருக்கிறது. இத்தகைய தேசீயத்தன்மை சர்வதேசீயம் என்ற இலட்சியத்திற்கு முரண்பாடானது அல்ல. ஏனெனில் சர்வதேச ஒருமைப்பாட்டிற்கான வழி, தேசங்களிடையே சமத்துவம் என்ற உறவின் அடிப்படையில்தான் அமைய முடியும் என்பதை இவ்விடுதலை இயக்கங்கள் நன்கு உணர்ந்திருக்கின்றன. இந்த உறவானது, எத்தகைய சார்புத்தன்மையோ அன்றி மேலாதிக்கதன்மையோ கொண்ட பிணைப்புகள் இல்லாது தன்னிச்சையாக தேசங்கள் மத்தியில் ஏற்படுவதாகும். இந்த தேசிய விடுதலைப் போராட்டங்கள் இரண்டு முக்கிய குறிக்கோள்களைக் கொண்டவை. அந்நிய ஆதிபத்திய அமைப்புக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் அதேவேளை, சுதேச சுரண்டல் ஒடுக்குமுறை அமைப்புகளுக்கு எதிராகவும் செயல்படுதல். தேசிய சமுதாயக் கட்டமைப்பில் நிலவும் சகல முரண்பாடுகளையும் களைந்தெறிந்து ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் புரட்சிகரமான நோக்கை இத்தேசிய விடுதலை இயக்கங்கள் கொண்டிருக்கின்றன.

## தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெண்கள்

தேசிய சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்தின் பின்னுல் பரந்துபட்ட மக்களை ஒரே அணியில் ஒன்று திரட்டுவதுதான் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் அடிப் படை நோக்குகளில் ஒன்ருகும். ஒரு தேசத்தின் பரந்து பட்ட மக்கள் திரளில் கிட்டத்தட்ட ஐம்பது வீதமான சனத்தொகை பெண்கள் என்பதை நாம் உணர்ந்துகொள் வது மிக முக்கியமானதாகும். ஆகவே, எந்தவொரு தேசிய அமைப்பிலும் பெண்கள் உள்ளார்ந்த புரட்சிகர அரசியல் சக்தியாக விளங்குகிருர்கள். சமூகப் புரட்சியில் பெண்களின் முக்கியத்துவத்தையும், பெண்ணின் விடுதலை யையும் வலியுறுத்தியவர் மாமேதை லெனின். இல்லங் களில், தனிமையிலே செய்யப்படும் வீட்டு வேலைகளின் குறுகிய தன்மை பெண்களின் வளர்ச்சியை பாதிக்கிறது என்பதையும் சமூக உற்பத்தியில் பெண்கள் இரக்கமின்றி சுரண்டப்படுகிருர்கள் என்பதையும் உணர்ந்த லெனின், ஒடுக்கப்படும் பெண்ணினத்தின் விடிவுக்காக போராடு வதன் அவசியத்தை தமது அரசியற் தொண்டர்களுக்கு சதா எடுத்துரைத்திருக்கின்ருர். சமூக ஒடுக்குமுறைகளின் திணறடிக்கும் அழுத்தங்கள் பெண்களின் அரசியல் விழிப் புணர்வுக்கு முட்டுக்கட்டையாக அமைவதுடன் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றத்தையும் பின் போட்டுவிடும் என்பதை லெனின் நன்குஉணர்ந்திருந்தார். அத்தோடு ருசியப் புரட்சியில் பெண்களின் ஆற்றலையும் அவர்களின் மகத்தான பங்களிப்பையும் அவர் நேரில் கண்டறிந்திருக்கிருர். இதனுல் பெண்களின் பங்கு ஒரு புரட்சியின் வெற்றிக்கு அத்தியாவசியமானது என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார். இது பற்றி அவர் குறிப்பிட் டிருப்பதாவது :

> "எந்த அளவிற்கு பெண்கள் பங்குபற்றுகிருர் கள் என்பதில்தான் ஒரு புரட்சியின் வெற்றி தங்கி யிருக்கிறது. சகல விடுதலை இயக்கங்களினதும் அனு வங்களிலிருந்து இந்த உண்மை புலனுகிறது"[1]



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

தன்னுடன் பணியாற்றிக் கொண்டிருந்த கிளாரா செட்லின் என்பவரோடு உரையாற்றிக் கொண்டிருக்கையில் லெனின் கூறுவார் :

> "பெண்கள் இல்லாமல் உண்மையான வெகுசன இயக்கம் எதுவுமே இருக்கவே முடியாது"[2]

எனவே பெண்களை அணிதிரட்டி அவர்களைப் போராட்டத்தில் பங்கேற்கச் செய்வது ஒரு தேசிய சுதந்திரப் போராட்டத்தின் வெற்றிக்கும் சோஷலிச சமுதாய மாற்றத்திற்கும் அத்தியாவசியமானதாகும். மெதுவாகவே பெண்ணினம் எழுச்சி பெறுகிறது என்றாலும் பெண்களின் பங்களிப்புத்தான் ஒரு புரட்சிகர போராட்டத்தின் ஆழத்தையும், விசாலத்தையும் எடுத்துக்காட்டும். உலகவிடுதலை போராட்டங்களின் வெற்றிகர வரலாறுகளிலிருந்தே இந்த உண்மையை உணர்ந்து கொள்ள முடிகிறது. ஒடுக்குமுறையாளரை தோற்கடித்து, சமூக ஆதிக்க அமைப்புகளை தகர்த்தெறியும் நோக்கில் மக்கள் மேற்கொள்ளும் போராட்டமானது பெண்களின் பங்கேற்பால் வலிமை பெறுகிறது. ஆயுதப் போராட்டம் உட்பட, சகல நிலைகளிலும் பெண்களின் பங்களிப்பானது அவர்களின் புரட்சிச் சக்தியை நிரூபித்திருக்கிறது; அவர்களை ஒரு முற்போக்கு வரலாற்று சக்தியாக எடுத்துக் காட்டியிருக்கிறது. சீனு, வியட்னும், கியூபா, சிம்பாவே, மொசாம்பீக், அங்கோலா, நிகராக்குவா ஆகிய நாடுகளில் கிளர்ந்த தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெண்கள் பங்குபற்றி தங்களுடைய நாட்டின் சுதந்திரத்திற்கு வழிகோலியிருக்கிறுர்கள். தென்னுப்பிரிக்கப் பெண்கள், எரீத்திரியப் பெண்கள், நமீபியா, ஓமான், பாலஸ்தீனம், எல்சல்வடோர், அயர்லாந்து இன்னும் இவைபோன்ற பலநாட்டு பெண்களும் தேசிய விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்று வருகிறுர்கள். புரட்சிகர அரசியலில் புகுந்து, புரட்சிகள் செய்து, தம்வசம் கொள்கை உறுதி, வீராதீரம், நிர்வாகத்திறன், துன்பங்களைத் தாங்கும் மனேதிடம்,

ஆகிய பண்புகள் உண்டென்பதை பெண்ணினம் நிரூபித்து காட்டியிருக்கிறது. இப் புரட்சிகர பண்பாற்றல் ஒன்று திரட்டப்படுவது தேசிய சுதந்திரப் போராட்டங்களை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்ல இன்றியமையாதது என்பதை அவர்களது போராட்ட அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. சமூக அநீதி, அடக்குமுறை, சுரண்டல் ஆகியனவற்றிற்கு எதிரான வெறுப்புணர்வு, ஒரு புரட்சிகர விழிப்புணர்வு, தேசியப் பற்றுணர்வு ஆகியனவை ஆண்களுக்கு மட்டுமே உரித்தான பண்புகள் அல்ல. இக் குணாதிசயங்கள் பெண்களிடமும் இருக்கத்தான் செய்கின்றன என்பதனை இப்புரட்சிப் பெண்கள் நிரூபிக்கத் தவறவில்லை.

### போராட்டத்தில் ஒரு போராட்டம்

ஒரு புரட்சிகர தேசிய போராட்டத்திற்கும், பழைமைவாத சமுதாயத்தின் பிற்போக்கான கட்டுப்பாடுகளுக்கும் மத்தியில் மாட்டிக்கொண்டிருக்கும் பெண்ணினம், புரட்சியில் காலடி எடுத்துவைப்பதற்கு முன்னராகவே ஒரு போரைச் சந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். சமத்துவ ரீதியில் இயல்பாகவே போராட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு மாறாக, இப்போராட்டங்களில் பங்குகொள்ள பெண்கள் போராடியே வழிவகுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. சமுதாய மரபுகளில், பழக்க வழக்கங்களில் அநீதியும் அடக்குமுறையும் திளைத்துப் போய்க் கிடப்பதால் இம்மரபுகள் எளிதில் வளைந்து கொடுப்பதில்லை. சமுதாயத்தின் இத்தகை தார்மீக கட்டமைப்பிற்கு சவால்விடும், எதிர்த்து நிற்கும், ஆபத்தாக விளங்கும் எந்தவொரு பெண்ணும், அவள் அப்படிச் செயல்படுவது ஒரு நியாயபூர்வமான இலட்சியத்திற்காக இருந்தாலும்கூட, ஆரம்பத்தில் சமுதாயத்தின் பதிலானது எதிர்ப்பாக, கண்டன விமர்சனமாக, அந்தப்பெண்ணை அந்நியப்படுத்துவதாக, சந்தேகிப்பதாக, அமைந்து விடுகிறது. புரட்சிகர விடுதலைப் போராளி



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி

களாக விளங்கும் ஆண்களின் நிலைகூட இத்தகையதாகத் தான் இருக்கிறது. வீரம்மிக்க புரட்சித் தலைவர் காஸ்ட்ரோ கூட, போராட்டங்களில் பெண்களின் உண்மையான உள்ளார்ந்த ஆற்றல்பற்றி, தன்னுள்ளேயும் தனது சக தோழர்களிடையேயும் நம்பிக்கையின்மையும் ஆண்மேலாதிக்க உணர்வும்தான் இருந்தன என்பதை ஒப்புக்கொள்கிறார். அவர் கூறுவதாவது:

''உண்மையில் பெண்களைப் பொறுத்தவரையில், நாம் தப்பெண்ணம் கொண்டவர்களாகவே இருந்தோம். யாராவது என்னிடம் பெண்களைப்பொறுத்தவரை தப்பெண்ணம் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டிருந்தால், ஒரு பொழுதும் அப்படியில்லை என்றுதான் நான் கூறியிருப்பேன். ஏனெனில் நான் அப்படிப்பட்டவன் அல்ல என்றுதான் என்னைப் பற்றி எண்ணியிருந்தேன். எமது பெண்களிடம் புரட்சிக்கான மகத்தான மனித வளமும், மாபெரும் உள்ளீட்டு சக்தியும் இருக்கிறது என்பதை நான் நம்பினேன். ஆனால் நடந்ததுதான் என்ன? என்ன நிகழ்ந்துவிட்டது, அன்றி நிகழ்ந்துகொண்டிருக்கிறது? உண்மையில், இந்த உள்ளார்ந்த சக்தி, நம்மில் பலர் கனவுகூடக் கண்டிராத வண்ணம் மேன்மை வாய்ந்ததாக உள்ளது என்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஒருவேளை உள்ளத்தினுள்ளே, ஆழ்மனதில் ஒரு தப்பெண்ணம், குறைத்து மதிப்பிடுதல் இருக்கிறபடியால்தான் இப்படியெல்லாம் சொல்கிறேமோ தெரியவில்லை.'' மேலும் அவர் குறிப்பிடுகையில்;

''நான் மரியானா கிரஜேல்ஸ் படைப்பிரிவை அமைத்தது எனக்கு நினைவிற்கு வருகிறது. இத் தோழர்களுக்கான இராணுவப் பயிற்சி கொடுப்பதில் நான் பங்கேற்றேன். பெண்களைக் கொண்ட ஒரு படைப்பிரிவை அமைத்தது பிடிக்காத காரணத்தினால்

புரட்சிப் போராளிகள் சிலர் மிகக் கோபம்கொண்டு இருந்தனர்.''[4]

புரட்சிப் பெண்கள் போராட்டத்தில் குதிக்கும்போது ஆண் தோழர்களிடமிருந்து பால் வேறுபாட்டுத்தன்மையுடன் தம்மைப்பிரித்துப்பார்ப்பதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களினத்தின் ஒரு அங்கமாக தம்மை எண்ணிக் கொள்ளும் அவர்கள், தேசியஒடுக்குமுறை ஆதிக்கத்திலிருந்து விடுபட தமது உயிரையும் அர்ப்பணிக்கத்தயாராகவிருக்கின்றனர். ஆனல் சமுதாய கட்டுப்பாடுகள் ஒருபுறமும், ஆணின தப்பெண்ணங்கள் மறுபுறமாகத் திணிக்கப்படும் பிரச்சனைகளை எல்லாம் அவர்கள் போராட்டப் பாதையில் எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது.

போராட்டத்தில் பங்குகொள்ள புரட்சிப் பெண்கள் முற்படும்போதெல்லாம் இத்தகைய நெருக்கடியான நிலைமை எழுகிறது. இப்படியான சூழ்நிலைகள் பெண் போராளிகள் மத்தியிலே பெண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. பெண் என்ற பாலின் அடிப்படையில் தாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்பதை உணர்த்தியிருக்கிறது. இத்தறுவாயில் தேசிய விடுதலைப் போராட்டங்களில் பங்குகொண்ட புரட்சிகரப் பெண்களின் பல்வேறு பரிமாண அனுபவங்களை இங்கு பதிவுசெய்திட நாம் விரும்புகிறோம்.

**சமூக அழுத்தங்கள் :**

முதலில் பெண்களுக்கு குடும்ப சூழலே ஒரு போர்க்களம் ஆகிறது. தங்கள் புதல்விகளின் தன்மானத்தை, கௌரவத்தை காப்பதாக எண்ணிக்கொண்டு பெற்றோர்கள் தொடுக்கும் விதண்டாவாதங்களுக்கு அவர்கள் பதிலளித்து ஆக வேண்டியிருக்கிறது; வாதாடிப் போராட வேண்டியிருக்கிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற விரும்பும் இளம் பெண்களுக்கு வீட்டில் எழும் சிக்கல்கள் எவ்விதமானவை என்பதை உதாரணம் காட்டி



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்.

விளக்க இங்கு பாலஸ்தீனிய மாதர்பொதுமன்றத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் அனுபவக் கூற்றை தருகிறேம்:

"முதலில் தேசியப் போராட்டம் குறித்து குடும்பத்துடன் கலந்துரையாடல் நடத்துமாறு நாம் எமது பெண் தொண்டர்களிடம் கேட்டுக்கொள்வோம்... பெற்றேர்கள் தங்கள் பெண்களைப் பற்றி மற்றவர்கள் கதை கட்டுவதை, அதாவது மாப்பிள்ளை பிடிப்பதற்குத்தான் அவள் முகாமிற்குச் செல்கிருள் அல்லது வீட்டுக்குப் பிந்தி வருகிருள் என்றெல்லாம் கூறுவதை விரும்புவதில்லை......குடும்ப அரங்கில் போராட்டங்களை நடத்திய எம்போன்றேரே சிறந்த தொண்டர்களாக முடியும். உண்மையில் போராட்டங்களில் மிகக் கடினமான போராட்டம் இது. பெண்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டப் போராட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துவதுண்டு. ஏனெனில் அவர்களது பங்களிப்பானது ஒருநாள் அவர்களது பெற்றேராலும் சமுதாயத்தாலும் கௌரவிக்கப்படும்."[5]

கணவர்களோடு எழும் பிரச்னைகள் பற்றி குறிப்பிடும்போது அவள் சொன்னுள் :

"பல பெண்கள் தமது கணவர்மாரினுல் கஷ்டத்திற்கு ஆளாகிருர்கள். அவர் புரட்சியில் ஈடுபட்டவராக இருக்கலாம். ஆனுல் தாம் அன்ருடம் வீட்டுக்கு வரும்போது உணவு தயாரிக்கப்பட்டு இருக்க வேண்டும் என எண்ணுகிருர். தாம் பிறந்து வளர்ந்த பாரம்பரியத்தின் மரபுகளையே அவர் பேணிப்பார்க்கிருர். மாற்றங்களினுல் தனது வாழ்க்கை முறைகள் பாதிக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. அவரது சொல்லுக்கும் செயலுக்கும் இடையே பெரிய முரண்பாடு இருக்கிறது"[6]

இன்னெரு பாலஸ்தீனப் பெண்ணிடமிருந்து அடுத்த உதாரணம் :



குழந்தையையும் துப்பாக்கியையும் கரங்களில்
ஏந்தி நிற்கும் பாலஸ்தீனியப் பெண் போராளி.

''நான் அனுபவித்த அடக்கு முறையும் துன்ப துயரங்களும் என்னைப் புரட்சியில் பங்கேற்கச் செய்தன. எமக்கு முன்னிலையில் எனது தந்தையை சித்திர வதை செய்தனர். இது என்னுள் ஒரு ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. எனது குடும்பம் எவ்வளவு தான் தேசப்பற்றில் திளைத்திருந்தபோதும் பாரம்பரியமும் சமூக மரபுகளும் தடைகளைத் திணிக்கத்தான் செய்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்தபோதும், இக்காரணங்களின் நிமித்தம் போராட்டத்தில் பெரிய அளவு பங்குபற்ற முடியவில்லை. என்னுடைய குடும்பம் என்னை எவ்வளவு தூரம் அனுமதிக்க வேண்டும் என்பதற்கான எல்லையையும் இவை நிர்ணயித்தன. நாங்கள் பங்கு பற்றினும் என்றால் அது மிகவும் இரகசியமாகத்தான் இருந்தது. இளம் பெண்கள் எதையெல்லாம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்பதில் குடும்பத்தினர் மட்டுமின்றி அயலாரும் தலையிடுவார்கள்''[7]

ஒரு புரட்சிப் போராளியாகவும் அதேவேளை தன்மீது தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு பொறுப்பான தாயாகவும் இருக்கும்பொழுது ஏற்படும் முரண்பாடு பெண்கள் எதிர் கொள்ள வேண்டிய மிகத் துன்பகரமான நிலையாகும். எனினும் பல பெண்கள் தமது அரசியல் உறுதிப்பாட்டையும் தனிப்பட்ட குடும்பப் பொறுப்புகளையும் ஒன்று சேர்ந்த மனோதிடத்துடனும் வீரத்துடனும் செயல்பட்டு வருகின்றனர். ஓர் உதாரணத்திற்கு:

''எனக்கு ஒன்பது குழந்தைகள் இருந்தாலும் நான் எல்லாச் செயற்பாடுகளிலும் பங்கேற்க விரும்புகிறேன்...நாம் (பெண்கள் என்ற முறையில்) முடிந்த அளவு போராடுகிறோம். ஒரு இயக்க அமைப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் முடிந்தளவு தன்னை அர்ப்பணிக்க வேண்டியது அவள் கடமையாகிறது. குழந்தைகளை வளர்த்து ஆளாக்கு

வது என்பதும் புரட்சியின் பொறுப்பே ஆகும். ஆயுதம் ஏந்துபவர்கள்தான் போராடுபவர்கள் என்பதல்ல. அழுது கொண்டிருக்கும் குழந்தையை வீட்டில் விட்டுவிட்டுபுரட்சிப்போராட்டத்தில் என்ளுல்முடிந்த பங்களிப்பைச் செய்வதற்கு வெளியே செல்வதுதான் மிகவும் வேதனையைக் கொடுக்கும் விசயம். நான் செய்யும் காரியங்களிலும் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. எனது இலட்சிய உறுதிப்பாட்டிலிருந்து என்னை நம்பிக்கை இழக்கச்செய்ய எனது அயலாரும் எனது உறவினரும எவ்வளவோ முயன்று பார்த்தனர். நான்அவர்கள் கூறுவதைக்கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. மாருக என்னேடு சேர்ந்து உழைக்குமாறு நான் அவர்களை மனம்மாற்ற முயற்சிப்பதுண்டு... பெண்களோடு இணைந்து செயலாற்றும்போது சகல நிலைகளிலும் நாம் பரஸ்பரம் அவர்களது துன்ப துயரங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும். அவர்கள் எத்தகைய சாக்குகள் கூறுவதற்கும் விட்டுவிடக் கூடாது. அவர்களுடைய பிரச்னைகள், குழந்தைகள் அல்லது வீட்டு வேலைகளாக இருந்தால் நாம் அவர்களுக்கு அதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொடுத்து இத்தகைய சாக்குகள் கூறுவதற்கான காரணங்களுக்கு இடமளிக்கக் கூடாது. அவர்களை எமது சகோதரிகளாக மதித்து, ஒருகுடும்பத்தின் அங்கமாகக் கருதி அவர்களது நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும்.''[8]

இதைப் போலவே, தேசிய விடுதலை இயக்கங்களின் இராணுவ, கொரில்லாப் பிரிவுகளில் சேர்ந்த பல பெண்களுக்கு, ஆண் ஆதிக்கமும், பாரம்பரியமாக பெண்களுக்கு வரிக்கப்பட்ட வேலைகள் என்ற தப்பெண்ணமும் பெரும் பிரச்னைகளை உருவாக்குவதுண்டு. நிகராகுவாவின் சான்டினிஸ்ட் தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒரு பெண் கொரில்லா வீராங்கனை கீழ்க்கண்டவாறு கூறுகிருர். இவர் நிகராகுவாவின் தலைநகரைக் கைப்பற்றி

இறுதித் தாக்குதலில் தலைமை தாங்கியவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கூறுவதாவது :

"சான்டினிஸ்ட் தேசிய விடுதலை இயக்கத்தோழர் களிடையே ஆண் ஆதிக்கப் பிரச்னை வெளிப்படை யாக இருந்தது. பெண்கள் வீட்டு வேலைக்கு மட்டுமே தகுதி பெற்றவர்கள் என்ற எண்ணம் அவர் களிடையே நிலவியது. செய்திகள் தாங்கி தூது செல்வதற்கு மேலாக எதுவுமே எம்மால் முடியாது என அவர்கள் நினைத்தார்கள். இதுபற்றி எல்லாம் நிறைய விவாதிக்கப்பட்டது. பாலியல் பிரச்னைகள் பற்றி சில தோழர்கள் வெளிப்படையாகவே பேசினர் கள். ஏனையோர் மௌனம் சாதித்தனர். மலைப் பிரதேசப் போராட்டத்திற்கு பெண்கள் தகுதியற்ற வர்கள்; பாலுறவுக்கு மட்டுமே அவர்கள் சிறந்தவர் கள்; அவர்கள் பிரச்னைகளை—அதாவது ஆண் பெண் உறவுப் பிரச்னைகளை உருவாக்கிய வண்ணம் இருப் பார்கள் என்று சில ஆண் தோழர்கள் வாதாடினர். ஆனால் அதேவேளை, பெண் பிரச்னையில் புரட்சிகரப் பார்வை கொண்ட ஆண்களும் இருக்கத்தான் செய் தனர். எமது போராட்டமோ ஒரு நீண்ட போராட் டமாக இருந்தது. விவாதங்கள் வாயிலாகவும், பெண் தோழியர் போர்அரங்கில் தமது திறனாற் றலையும், வீரத்தையும் நிரூபித்துக் காட்டியதாலும் இப்போராட்டத்தில் நாம் வெற்றிபெற முடிந்தது."[9]

**போர்க்களத்தில் வீரகாவியம்**

குடும்ப சூழலும் சமூக அழுத்தங்களும் அவர்களது பங்களிப்பிற்கு முட்டுக்கட்டையாக விளங்கியபோதும், தேச சுதந்திர விடுதலைப் போரில் பங்கு கொள்வதுதான் ஒடுக்கு முறையிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி என பெண்ணினம் தெளிவாக உணர்ந்து கொண்டது. சமத் துவம் நிலவும் ஒரு சமதர்ம சமுதாயத்தை சிருஷ்டிப்பதில் தாமும் பங்கேற்பதே தமது விடிவுக்கு வழி என்பதனையும்

அவர்கள் புரிந்து கொண்டனர். எனவே, தமது தேசாபிமான உணர்விற்கு செயல் வடிவம் கொடுக்க ஆயிரக் கணக்கில் பெண்கள் போராட்டக்களத்தில் குதித்தனர். பெண்கள் பங்குகொண்ட வீர சுதந்திரப் போராட்டங்கள் அனைத்தையும் இந்த சிறிய நூலில் விவரித்து எழுதுவது முடியாத காரியம். நாம் இங்கு ஒருசில உதாரணங்களையே தர விரும்புகிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வியட்னாமிய மக்கள் தொடுத்த விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு ஒரு மகத்தான வீர காவியமாகும். பெண்கள், கொரில்லா வீரர்களாகப் பயிற்சிபெற்றுப் போராடினர். அவர்கள் மக்களை அணிதிரட்டினர்; மக்களுக்கு தலைமை தாங்கினர்; மக்களின் துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொண்டனர். இப்புரட்சிப் பெண்களில் எத்தனையோ பேர் கொடூர சித்திரவதைக்கு ஆளாகினர். எண்ணற்றோர் செத்து மடிந்தனர்.

கியூபாவில், சர்வாதிகாரி பாட்டிஸ்டாவின் ஆட்சியை தூக்கி எறிவதற்கு நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு அதிமுக்கியமாக அமைந்தது. இப்புரட்சிப் பெண்கள் எதிர்ப்புப் பேரணியை திரட்டினார்கள்; தலைமறைவு இயக்கத்தில் பணி புரிந்தனர்; நிதி திரட்டினார்கள்; கொரில்லா வீரர்களுக்குத் தேவையான பொருட்களை சேகரித்தார்கள்; விடுதலைப்போராளிகளுக்கு தங்கள் வீடுகளில் புகலிடம் கொடுத்தார்கள்; ஆடைகளுக்குள் ஆயுதங்களை ஒளித்தெடுத்துச் சென்று கொடுத்தார்கள்; கொரில்லாப் போர்க் களத்திலும் குதித்து அஞ்சா நெஞ்சத்துடன் போராடினார்கள். வீர வரலாறு படைத்த பெண் படைப்பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டது. இவ் விடுதலை வீராங்கனைகளின் தீரம்பற்றி பிடல் காஸ்ட்ரோ கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :

''ஹொல்குவின் நகரை நோக்கி முன்னேறிய படையில், பெருந்தொகையில் பெண்களைக் கொண்ட அணி ஒன்றும் பங்கேற்றது. ஹொல்குவின் நகரை

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

சமீபித்தபோது எதிரி இராணுவத்திற்கும் பெண் படைப்பிரிவுக்கும் மத்தியில் ஆக்ரோஷமான சண்டை மூண்டது. இதில் படைப்பிரிவுத் தலைவி காயமடைந் தார். படைப்பிரிவுத் தலைவர் காயமுற்றால் பின் வாங்கிவிடுவது என்பது பொதுவான விதியாக இருந் தது. இது சரியானதொரு முறையல்ல என்றாலும் செயற்பாட்டால் ஏற்பட்ட வழக்கமாயிருந்தது. சிப்பாய்களை ஏற்றிவந்த ஒரு இராணுவ வாகனத்தை இந்தப் பெண் படைப்பிரிவு தாக் கியது. அதில் படைப்பிரிவுத் தலைவி காயமடைந்த போதும் பெண் போராளிகள் சளைத்துவிடவில்லை.



புரட்சிக்களத்தில் கியூபப்பெண்கள்

தொடர்ந்து போராடிய அவர்கள் வண்டியிலிருந்த சகல இராணுவத்தினரையும் கொன்று குவித்து ஆயு தங்கள் அனைத்தையும் கைப்பற்றினர். இவர்களது

இந்த நடவடிக்கை தனிச்சிறப்பு வாய்ந்த தீரச்செயல் என்றே சொல்ல வேண்டும்.''[10]

ஆயுதப் போராட்டம் மூலமே தேசிய விடுதலையைப் பெற்றெடுக்கலாம் என்ற கொள்கைத் திட்டத்துடன் எரீத்திரிய மக்களின் விடுதலை முன்னணி அமைக்கப்பட்ட அந்தக் காலம் தொட்டு விடுதலைப் போரில் பெண்கள் பங்கேற்றனர். எரீத்திரிய தேசிய விடுதலைக்கும் தமது சொந்த சமூக விடிவிற்கும் பெண்களின் பங்களிப்பு முக்கியமானதென்பது அவர்களது புரட்சிகர அரசியற் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். கொரில்லா வீரர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம் ஆகியனவற்றை பெண்களே ஏற்பாடு செய்கின்றனர். எதிரிப் படைகளின் நடமாட்டம் பற்றி தகவல்கள் சேகரித்துக் கொடுக்கிறார்கள். காயமடைந்தவர்களைக் கண்காணித்துக் கொள்கிறார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார்கள். ஆண்கள் போலவே பெண் போராளிகளும் போராட்ட மையக்குழுக்களில் அணி சேர்க்கப்படுகிறார்கள். எதியோப்பிய ஒடுக்குமுறையாளருக்கு எதிரான போராட்டங்களில் அவர்கள் பல வெற்றிகளை ஈட்டியிருக்கிறார்கள். மக்கள் விடுதலை இராணுவத்தில் பெண் தொழிலாளர்கள், பெண் விவசாயிகள், மாணவிகள் பெருந்தொகையில் அங்கம் வகிக்கின்றனர். அவர்களுக்கு ஆறு மாதம் இராணுவப் பயிற்சியும் ஆறு மாதம் அரசியல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மக்கள் விடுதலை இராணுவத்தின் தாக்குதல் பிரிவுகள் சிலவற்றிற்கு பெண்கள் தலைமை தாங்கி வருவது குறிப்பிடத்தக்கது. ஆழமாக அரசியல் மயப்படுத்தப்பட்டு, பலமாக ஆயுதம் தரித்த பெண் போராளிகள் விடுதலைப் போராட்டக் களங்களில் எதிரிப்படைகளை விரட்டியடித்து வீரவரலாறுகளைப் படைத்து வருகின்றனர். அதிரடிப்படை நடவடிக்கைகளிலும் பங்குபற்றி எதிரியின் இராணுவத் தளங்களையும், பொருளாதார நிலையங்களையும் தகர்த்தெறிந்து பெண்கள் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். தாய் நாட்டை

மீட்கும் இந்த இலட்சியப் போராட்டத்தில் எத்தனையோ புரட்சிப் பெண்கள் வீர மரணமும் எய்தியுள்ளனர். இராணுவ ரீதியில் மட்டுமின்றி, விடுதலைப் போராட்டத்தின் சகல நிலைகளிலும்—வைத்தியப் பிரிவு, கல்விப் போதனை, பிரச்சாரம், சமூக நலன் ஆகிய பல்வேறு துறைகளிலும் எரீத்திரியப் பெண்கள் பணிபுரிந்து தேசியப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.



கொரில்லா வீரர்களுக்கு ஆயுதத்தள பாடங்களைத் தாங்கிச் செல்லும் எரீத்திரியப் பெண் போராளிகள்

தென்னாப்பிரிக்க வெள்ளையாட்சியாளரின் நிறவெறிக் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் தென்னாப்பிரிக்க கறுப்பரினப் பெண்கள் முன்னணி வகிக்கிறார்கள். கறுப்பரின மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டம் என்பது ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே பலம்வாய்ந்த தென்னாப்பிரிக்க

ஒடுக்குமுறை அரசுக்கு எதிராக பெண்கள் துணிவோடும் தளரா உறுதியோடும் போராடிவருகின்றனர். தமது சொந்த நாட்டிலே தொழிலாற்றுவதற்கும் சுதந்திரமாக நடமாடுவதற்கும் அனுமதிச் சீட்டுகள் பெற்றிருக்க வேண்டும் என்று தென்னுபிரிக்க அரசு ஒரு அநீதியான ஆணையைப் பிறப்பித்தது. இந்த அடக்குமுறை ஆணையை எதிர்த்து நடந்த எழுச்சிமிக்க போராட்டத்தை பெண்கள் தலைமையேற்று நடத்தினர். இந்த எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு கொண்ட ஆயிரக்கணக்கான பெண்கள் சிறை சென்றனர்; மிருகத்தனமான சித்திரவதைக்கு ஆளாகினர். தேசிய விடுதலை என்ற இலட்சியத்தில் அவர்கள் கொண்டிருந்த அரசியல் உறுதிப்பாடு காரணமாக, தமது குடும்பத்திலிருந்தும் குழந்தைகளிடமிருந்தும் அவர்கள் பிரிந்து வாழ நேர்ந்தது. எனினும், மக்களை அடிமைத்தனத்திலும் இழிமைத்தனத்திலும் தாங்கொணு வறுமையிலும் தள்ளிவிட்டு, அவர்களது அடிப்படை மனித உரிமைகளை படிப்படியாக விழுங்கிவரும் இந்த இனவெறி ஆட்சியமைப்பை ஒழித்துக்கட்டுவதில்தான் எதிர்கால சுபீட்சம் தங்கியிருக்கிறது என்பதனை இப்பெண்கள் முழுமையாக உணர்ந்திருக்கின்றனர். இதனுல் இவர்கள் ஆப்பிரிக்க தேசிய விடுதலை இயக்கத்தின்கீழ் அணிதிரண்டனர். இவ்வியக்கம் (ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்) 1960-லிருந்து தடைசெய்யப்பட்டு தலைமறைவாக இயங்கி வருகிறது. இதன் இராணுவ அமைப்பில் பெண்கள் அணிதிரண்டு புரட்சிகர ஆயுதப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து வருகின்றனர்.

நிகராகுவாவில், சன்டினிஸ்ட் தேசிய விடுதலை முன்னணியின் தலைமையில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட தேசிய விடுதலைப் போரில் ஆயிரக்கணக்கில் புரட்சிப் பெண்கள் பங்கு கொண்டனர். தேசிய விடுதலை இராணுவத்தில் படைப்பிரிவுத் தலைவிகளாகவும், போராளிகளாகவும் சேர்ந்து பெண்கள் போரிட்டனர். விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்ற தருணத்தில் தேசிய இராணு

வத்தில் 30 வீதமானோர் பெண்களாக இருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

### புரட்சியில் புரட்சி

புரட்சியில் பங்குகொள்வோரின் வாழ்க்கை யானது புரட்சிகரமான மாற்றங்களைக் காண்கிறது. தேசிய விடுதலைப்போராட்டங்களில் உருவகம்கொள்ளும் புரட்சிகர சூழ்நிலையானது பெண்களின் வாழ்க்கையில் பெண்கள்பற்றிய பழமைவாதப் பார்வையில், ஒரு புரட்சி கரமான மாற்றத்தை கொண்டுவரத்தான் செய்கிறது. போராட்டத்தில் கால்வைத்த ஆரம்ப கட்டத்திலிருந்தே பெண்கள் பிரச்னை விமர்சனத்திற்கு ஆளாகிறது. குடும்ப, சமூக, ஆணாதிக்க தப்பெண்ணங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படுகின்றன. ஆயுதப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் பெண்கள் ஆரம்பத்தில் மரபு வழி வேலை களில் ஈடுபடுத்தப்படுவதுண்டு. காயமுற்ற விடுதலைப் போராளிகளை கண்காணித்தல், சமைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடும்பொழுது அவர்களின் சேவை பாராட்டப்படுகிறது. எனினும் காலப்போக்கில், ஆயுதம் ஏந்துவது உட்பட, போராட்டத்தின் சகல பரிமாணங் களிலும் பெண்கள் பங்கேற்கின்றனர். இக்கட்டத்தில், ஆண்—பெண் உறவு முறைகளிலும், பாலுறவு ரீதியான தொழில் பிரிவுகளிலும் அடிப்படையான மாற்றங்கள் நிகழ்ந்துவிடுகிறது. இப்பேர்ப்பட்ட அனுபவங்கள் பெண்களுக்கு ஒரு புதிய விழிப்புணர்வை, ஒரு புதிய நம்பிக்கையை, தமது ஆற்றல்பற்றி ஒரு புதிய மதிப் பீட்டை உண்டுபண்ணி விடுகிறது. இது சம்பந்தமாக, நிகராக்குவா விடுதலை இராணுவத்தின் புரட்சிகர பெண் தளபதி ஒருவர் கூறுவதாவது:

> ''தனிமனித உறவுகளில் மாற்றங்கள் ஏற்படத் தான்செய்தன. பொதுவாக, இவ்வுறவுகளில் முன் னேற்றம் ஏற்பட்டது என்றே நான் நினைக்கிறேன். ஒரு புரட்சிகரமான போக்கிலும் கருத்துக்களிலும்

மாற்றம் ஏற்படத்தான் செய்கிறது. பெண்களைப் பொறுத்த மட்டில் இதுதான் நிகழ்ந்திருக்கிறது. எமது புரட்சியில் பெண்களும் பங்கேற்றனர். சமையல் அறைக்குள் அவர்கள் புரட்சியை நடத்தவில்லை. ஆயுதம்தாங்கிய போராளிகளாகவும், அரசியல் தலைமையிலும் பெண்கள் பங்கேற்றனர். இது எமக்கு முற்றிலும் ஒரு புதிய அனுபவத்தைக் கொடுத்தது. யுத்த காலத்தில், எமது பெண்கள் வேறு பல பணிகளிலும் ஈடுபட்டனர் என்பது உண்மையே. இதன் காரணமாக பெரும் தார்மீக திடத்தை அவர்கள் பெற்றனர். ஆண்களும், மிக நெருங்கிய உறவில்கூட, பெண்களுக்கு மதிப்பளிக்கவே செய்தனர். இதனால், ஒரு பெண் போராளிக்கு கை நீட்டவோ அல்லது துன்புறுத்தவோ எந்தவொரு ஆணும் துணிந்துவிடப் போவதில்லை. பெண்கள்பற்றிய நிலைப்பாடு உட்பட, மிக ஆழமாக வேரூன்றியிருக்கும் எதிலுமே மாற்றம் ஏற்படவே செய்கிறது.''[11]

நமீபிய விடுதலை இயக்க (தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கம்) மாதர் அமைப்பு உறுப்பினர் ஒருவர் கூறுவதாவது:

''போராட்டத்தின் மும்முனைகளிலும், அதாவது ராஜதந்திர, இராணுவ, அரசியல் ரீதியாக, ஆண்களுடன் தோளோடு தோள்நின்று போராட பெண்கள் முன்வந்ததால் அவர்களுக்கு ஆண்கள் பெரும் மதிப்பை அளித்தனர். ஆபிரிக்க மரபைச் சார்ந்த ஆண்கள், பெண்களின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் பாரம்பரிய வழக்கங்களில் திளைத்துப் போயிருந்ததால், பெண்களைப் பலவீனமானவர்கள் எனக் கருதினர். ஆனால் இன்று முகாம்களிலுள்ள ஆண்கள் அப்படிக்கருதுவதில்லை. சமையல் செய்வதற்காகவே பெண்கள் ஒதுக்கப்படவேண்டியவர்கள் என எண்ணுவதில்லை. இன்று வேலைகள் பகிர்ந்

தளிக்கப்படுகின்றன. தோட்டவேலை, சமையல் வேலை, முகாமில் வேறெந்த வேலையாக இருந்தாலும், பால் வேறுபாடின்றி குழுக்களிடையே பகிர்ந்தளிக் கப்படுகிறது. நமீபிய விடுதலை இயக்கத்தலைமையை எடுத்துப் பார்த்தால் மத்திய குழு, நிர்வாகக்குழு ஆகியவற்றில் ஆண்-பெண் இரு பாலாருமே அங்கம் வகிப்பதைக் கண்டுகொள்ளலாம். எமது விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு திரட்டும் நோக்கில் சர்வதேச அரங்கிலும் பெண்கள் இயங்கிவருகிறார்கள், ஆண் பெண் உறவில் எத்தனையோ பாரம்பரிய தடைகள் இருந்த போதும், ஒடுக்குமுறை அமைப்பிற்கு எதிராக ஒன்றிணைந்து போராடவேண்டிய அவசி யத்தை பெண்கள் உணர்ந்துள்ளனர் என்பதை அறிய நாம் பெருமிதம் கொள்கிறோம். நாம் பெண்கள் என்றரீதியில் மட்டு மல்லாமல், கறுப்பர்கள் என்ற ரீதியில் ஆண்களாகவும், பெண்களாகவும் ஒடுக்கப் படுகிறோம்.''[12]

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றதன் காரண மாக, பெண்களின் அரசியல் விழிப்புணர்வு எவ்விதம் மாற்றமடைந்தது என்பது பற்றி இவர் மேலும் கூறுவ தாவது :

''எழுபதுகளில் முதன் முதலாக பெண்கள் விடுதலை இயக்கத்தில் பங்களிக்க முன்வந்தபோது, எந்தவொரு பெண்ணுவது தனது கருத்தை வெளிப் படையாகக் கூறுவதைக் காண்பதுஅரிதாக இருந்தது. பெண்கள் எதற்கும் அருகதையற்றவர்கள், சமை யலறைக்குள் நிரந்தரமாகத் தள்ளப்படவேண்டியவர் கள் என்ற கருத்தை நமீபியா நாட்டில் எதிரி நன்கு நிலைநிறுத்தி விட்டான். ஆனல் பெண்கள் வெளிவரத் தொடங்கியதும் நாம் அவர்களை அணிதிரட்டி, சகல முனைகளிலும் போராட தயார் செய்தபோது அவர் களது விழிப்புணர்வு விரிவடையத் தொடங்கியது.

ஆயுதம் ஏந்துவது, போராடுவது, போராட்டத்தில் உயிர்துறப்பது என்பதெல்லாம் காலத்தை விரய மாக்கும் செயல்கள் என அவர்கள் கருதவில்லை. மாறுக அவர்கள் இதில் பெருமிதம்கொண்டார்கள். போர்ப் பயிற்சிக் களத்திற்கு (அங்கோலாவிலுள்ளது) ஒருமுறை நான் விஜயம் செய்தபோது, அவர்கள் திறந்தவெளியில், குளிரில், பசியில் உறங்கிக்கொண் டிருந்ததைக் கண்டேன். அவர்களிடம் கேட்டேன். ''தோழிகளே, ஏன் இங்கு வந்தீர்கள்? ஏன் நமீபி யாவை விட்டு வெளியேறினீர்கள்?'' அவர்கள் சொன் ஞர்கள்: நாம் பயிற்சிபெற்று, திரும்பிச்சென்று, போராட விரும்புகிறேம். அதுவே எமது சுபீட்சத் திற்கு வழி, எமது சுதந்திரத்திற்கு ஒரே வழி.''[13]

சர்வதேச மாநாடு ஒன்றில் பேசும்பொழுது சிம்பாப் வேயைச் சேர்ந்த பெண் புரட்சிவாதி ஒருவர் கீழ்கண்ட வாறு குறிப்பிட்டார்:

''கடந்த காலத்தில், கிராமப்புற வளர்ச்சிக்கு பெண்கள் தொழிலாளராக உழைத்தனர். ஆனல் துர திர்ஷ்டவசமாக, அவர்களது உழைப்புக்கு ஆண்வர்க் கத்தினுல் எந்தவித முக்கியத்துவமும் கொடுபட வில்லே. ஆனல், விடுதலைப் போராட்டத்தில் பெண் கள் அளித்த பங்குதான் எங்கள் தகுதியை ஆண்கள் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தது.''[14]

## மகத்தான வெற்றிகள்

தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் சிக்குப்பட்டிருக்கும் பெண்களது பலரகப்பட்ட புரட்சி அனுபவங்களே இப்பிரசுரத்தின் முதற்பகுதி சுருக்கமாகக் கூறுகிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் எத்தகைய பரிமாணங்களில் அவர்கள் பங்குபற்றுகிறுர்கள், அவர்கள் எதிர்கொள்ளும் சமூக ஒடுக்குமுறையின் தன்மை, அவர் களின் பங்களிப்புக்கு பாதகம் விளேவிக்கும் சக்திகள் ஆகியனபற்றியும் இதில் எடுத்துக்கூறியுள்ளோம். ஒவ்



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

வொரு தேசிய, சமூக அமைப்பிலும் இந்த தாக்குதல்கள் மாறுபட்ட வடிவங்களைக் கொண்டிருப்பினும் ஒட்டு மொத்தத்தில் அவை பெண்ணினத்தின் உலகளாவிய ஒடுக்குமுறையை குறித்துநிற்கின்றன. புரட்சிப் பெண்களின் போராட்ட அனுபவங்களிலிருந்து இந்த உண்மையை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. சதா போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் புரட்சிப்பெண்ணின் விடுதலைக் குரலை நாம் இங்கு கேட்கமுடிகிறது. சமூக வாழ்வின் சகல பரிணாமங்களிலும் தாமும்பங்குகொள்ள வேண்டும், ஒரு தேசத்தின் சமூக, அரசியல் வாழ்வை வளப்படுத்தி நெறிப்படுத்த தாமும் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும், பெண்ணினம் விடிவுபெற்று சுதந்திரமான சமூக ஜீவிகளாக வாழவேண்டும் என்பதே இந்தப் போர்க் குரலாகும். இந்தப் புரட்சிப் போரில் பெண்ணினம் மகத்தான வெற்றிகளை ஈட்டிவருகிறது. தேசிய விடுதலைப் போராட்டங்களில் பங்குகொண்டு, தேசிய வெகுசன விடுதலையுணர்வை வலுப்படுத்தி, பெண்பற்றிய தவறான கருத்துக்களை தகர்த்தெறிந்து, சமூக வாழ்வில் தமது பங்கையும் மதிப்பையும் நிலைநிறுத்திவருகிறார்கள் இன்றைய புரட்சிப் பெண்கள்.

*இரண்டாவது பகுதி*

# தமிழ்ப் பெண்களும் தமிழீழத் தேசியப் போராட்டமும்

### *தேசிய ஒடுக்குமுறையும் தமிழ்ப் பெண்களும்*

ஒடுக்கப்படும் மக்கள் என்ற ரீதியில் நாம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். உலக நாடுகளால் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் தேசிய சுயநிர்ணய உரிமை என்ற சனநாயக தத்துவத்தின் கீழ் எமது போராட்டம் நெறிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த ரீதியில் எமது போராட்டம் நியாயமானது; சட்டரீதியானது. சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் எம்மீது தொடர்ச்சியாக கட்டவிழ்த்துவரும் கொடூர ஒடுக்குமுறை காரணமாகவே நாங்கள் அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். ஒரு பாசிச, பயங்கரவாத அரசமைப்பின்கீழ் நாம் மானம் இழந்த, மனிதம் இழந்த, இழிவான வாழ்க்கையை வாழ வேண்டியிருக்கிறது. எத்தனையோ ஆண்டுகளாய் எமது மக்கள் காந்தீயப் பாதையைக் கடைப்பிடித்தனர். பொறுமையோடு, பெரும் சகிப்புத்தன்மையோடு எமது மக்கள் அகிம்சைத் தத்துவத்தின் அமைதி வழியை நாடினர். அடிப்படை உரிமைகளை மீளப்பெற்று ஒரு சுதந்திரமான, கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்கு நாம் மென்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டோம். ஒரு கூட்டாட்சியின் கீழ் சிங்கள இனத்தோடு கூடிவாழ்வதற்கு நாம் எம்மாலானவரை முயற்சிகளை எடுத்தோம். ஆனால்

சிங்கள இனவாத ஆளும்வர்க்கமோ எமது நியாயமான, நாகரிகமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கவில்லை. பதிலாக, எமது அமைதிவழி அரசியல் போராட்டங்கள் ஆயுத பலாத்காரத்தால் அடக்கியொடுக்கப்பட்டன. அரச பயங்கரவாதத்தின் அட்டூழியங்கள் பொறுமையின் எல்லைக்கு எமது மக்களைத் தள்ளின. இறுதியில், இனக் கொலை வடிவம் எடுத்த இந்த அடக்குமுறையானது எமது தேசத்தின் அடிப்படை அமைப்புகளை ஆட்டம் காணச் செய்தது; எமது மக்களின் உயிர்வாழ்விற்கே ஆபத்தாக அமைந்தது. இந்த சூழ்நிலையிலேயே பிரிவினைப் போராட்டம் ஒரு தவிர்க்கமுடியாத கோரிக்கையாக எழுந்தது. இவ்விதம் வரலாற்று ரீதியாக உருவகம் பெற்ற எமது விடுதலைப் போராட்டம், வளர்ச்சிபெற்று முதிர்ச்சிபெற்று ஆயுதப் போராட்டவடிவத்தை எடுத்திருக்கிறது. இந்த ஆயுதப் போராட்டத்திற்கு மூலகர்த்தாவாகத் திகழ்ந்து, ஆயுதப் புரட்சிப் போரை முன்னெடுத்துச் செல்வது எமது விடுதலை இயக்கமாகும். எமது மக்களின் தேசிய விடுதலைக்கும் சமூக விடிவிற்கும் புரட்சிகர ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்பதை சதாவலியுறுத்தி வந்ததும் எமது புரட்சிகர இயக்கமே. நாம் முன்னெடுத்துச் செல்லும் இந்த ஆயுதப் போராட்டமானது இன்று வெகுசன மட்டத்தில் விரிவடையும் கட்டத்தை அடைந்துள்ளது. இந்தப் புரட்சிகர சூழ்நிலையில், ஆயுதம்தரித்த தேசிய விடுதலைப் போரில் பெண்களும் பங்குகொள்வது இன்றியமையாதது; தவிர்க்க முடியாததும் கூட. பெண்களின் பங்களிப்பே எமது விடுதலைப்போரை வெகுசன ரீதியில் ஆழமாக்கி, விரிவாக்கம் செய்யும்.

தமிழீழ தேசிய இனத்தில் சரிபாதி சனத்தொகை என்ற காரணத்திற்காக தமிழ்ப் பெண்களும் தேசிய அரசியல் சுதந்திர எழுச்சியில் சிக்குப்பட்டுள்ளனர். தேசிய அரசியல் போக்கால் எழுந்த நெருக்கடியிலும், கொந்தளிப்பிலும் பெண்களும் ஈர்க்கப்பட்டுள்ளனர்.

அரச அடக்குமுறைகளுக்கு அவர்களும் நேரடியாகப் பலியாக வேண்டியிருக்கிறது. தமிழினத்தின் சமூக பொருளாதார வாழ்வில் மிக ஆழமாக ஊடுருவியிருக்கும் இந்த ஒடுக்குமுறையானது தமிழ்ப் பெண்களைப்பொறுத்த மட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தத் தவற வில்லை. இதனால் அவர்களது வாழ்க்கையோ ஆழமாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

**இனவெறிக் கொடுமையும் கற்பழிப்பும்**

எமது மக்கள் மீது ஏவப்பட்டிருக்கும் இன ஒழிப்பு ஒடுக்குமுறையின் மிகக் கொடூரமான அம்சமாக விளங்கு வது திட்டமிடப்பட்ட இனவெறித் தாக்குதல்களாகும். இப்பேர்ப்பட்ட இனவாதப் பெரும் தீ இலங்கைத் தீவில் **1956, 1958, 1961, 1974, 1977, 1979, 1981, 1983** ஆகிய வருடங்களில் சுவாலைவிட்டு எரிந்தது. இந்தப் பயங்கரமான இனவெறிப் பேயாட்டங்களின் போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கில் சொத்துகள் நாசமாக்கப்பட்டன. லட்சக்கணக்கான மக்கள் வீடிழந் தனர். இந்த இனவெறிப் பித்தலாட்டத்தில் மிக மோசமான கொடுமைக்கும் அவமானத்திற்கும் ஆளாக் கப்பட்டோர் பெண்கள் ஆவர். தமிழ்ப்பெண்கள் மிகவும் அருவருக்கத்தக்க முறையில் இனவெறிக்கும் காமவெறிக் கும் இலக்காகி கற்பழிக்கப்பட்டனர். கடந்த ஜூலையில் ஏற்பட்ட இனப்பூகம்பத்தின்போது இருநூறுக்கும் மேற் பட்ட பெண்கள் சிங்கள வெறியரின் காமாந்தகார வன்முறைக்கு பலியாகியிருக்கலாம் என மதிப்பிடப் பட்டிருக்கிறது. திருமணமாகாத இளம்பெண்கள், திருமணமாகிய பெண்கள், மூதாட்டிகள், கர்ப்பிணி களாகத் தமிழ்ப் பெண்கள் மிகவும் காட்டுமிராண்டித்தன மாகக் கற்பழிக்கப்பட்டனர். பெற்றோர்கள் கண்முன்னே இளம்பெண்களும், கணவர்கள் கண்முன்னே மனைவிகளும் கற்பழிக்கப்பட்டனர். இத்தகைய அருவருப்பான காட்டு



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

மிராண்டித்தனமான செயல்கள் மனிதக் கீழ்மையின் ஆழத்தை மட்டும் காட்டவில்லை; எமது மக்கள்மீது மிகவும் மோசமான அவமானத்தையும் அவமரியாதையை யும் ஏற்படுத்தவேண்டுமென்ற சிங்கள இனவெறியரின் குரூரத்தனமான நோக்கத்தையும் காட்டுகிறது.

தமிழ்ப் பெண்கள் மீதான கற்பழிப்பு வெறும் இனவெறி அல்லது காம விரக்தியின் வெளிப்பாடு என்று மட்டும் கொள்ளக்கூடாது. இதன் அடிப்படையான நோக்கம் தமிழ்க் கலாசார அறநெறிக் கோட்பாடுகளை மிகக்கேவலமான முறையில் அவமரியாதை செய்வதாகும். கற்பு, தூய்மை போன்ற பண்பியல்புகளை தமிழ்ப் பண்பாடு புனிதமானதாகக் கொள்கிறது. எனவே, இந்தக் கற்பழிப்புகள் தமிழ்க் கலாசார மதிப்பீடுகள், அறநெறிக் கோட்பாடுகள் ஆகியவற்றின்மீது தொடுக்கப் பட்ட திட்டமிட்ட தாக்குதல்கள் ஆகும். கற்பழிப்புக் கொடுமைக்கு ஆளான பல பெண்கள் தனிப்பட்ட முறையில் தாங்கொணுத் துன்பத்தையும், ஆழமான அவமான உணர்வையும் அனுபவித்தனர். இதனுல் சிலர் வாழ்க்கையை எதிர்கொள்ள முடியாது தற்கொலை செய்து கொண்டனர். இந்தக் கற்பழிப்புச் செயல்கள் மூலம் தமிழ் மக்களைக் கேவலப்படுத்தி அவமானத்திற்கு ஆளாக் குவதே சிங்கள இனவெறியர்களின் இழிவான நோக்காக உள்ளது. எனவே, கற்பழிப்பினை பெண்ணினத்தை அடிமைகொள்ளும் சிங்கள இனவாதிகளின் பயங்கர ஆயுதமாகவே நாம் கொள்ளவேண்டும்.

## இருதுருவ ஒடுக்குமுறை

தமிழ்ப் பெண்கள் இருவகையான ஒடுக்குமுறைக்கு ஆளாகிறுர்கள். ஒன்று, சிங்களப் பேரினவாதக் களத் திலிருந்து பிரவாகமெடுக்கும் **தேசிய ஒடுக்குமுறை**. மற்றது தமிழ்க்கலாசார அறநெறி விதிகள், மரபுகளால் எழும் ***சமூக ஒடுக்குமுறைகள்***.

தமிழ்த் தேசிய இனத்தின் அத்திவாரத்தையேஆட்டம் காணச் செய்துவிட்ட தேசிய ஒடுக்குமுறையின் தாக்கம் தமிழ்ப்பெண்ணினத்திற்கு பெரும் தீமைகளை விளைவித்தது. தமிழ் மக்களின் சமூக-பொருளாதார வாழ்வினைச் சீர்குலைக்கும் நோக்கமாய் சிங்கள அரசுகள் கொண்டுவந்த இனவாதச் சட்டங்கள், பாரபட்ச நடவடிக்கைகள் தமிழ்ப் பெண்ணினத்தைப் பாரிய அளவில் தாக்கியது. 1948-49ம் ஆண்டுகளில் சிறிலங்கா அரசினால் அமுலாக்கப்பட்ட குடியுரிமைச்சட்டங்களின் விளைவாக மலையகத்தில் ஐந்து லட்சம் பெண்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டதுடன் மிகமோசமான அடிமைத் தொழிலுக்கு நிரந்தரமாகத் தள்ளப்பட்டனர். கல்வித்துறையிலும் தொழிற்துறை யிலும் கொண்டுவரப்பட்ட அநீதியான இனவாதச் சட்டங்கள் தமிழ் இளம்பெண்களைப் பெரும் இன்னல் களுக்கு இலக்காக்கியது. உயர்கல்விக் கதவுகள் அடைக் கப்பட்டு, தொழில்வாய்ப்புகள் தடைசெய்யப்பட்டதன் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான இளம்பெண்கள் நிரந்தரமாகத் தமது வீடுகளில் முடங்கிக்கிடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இவ்வாறுகத் தமிழ்ப் பெண்ணினத்தின் ஆற்றல்கள் நசுக்கப்பட்டன; ஆர்வங் கள் சிதைக்கப்பட்டன. அதனால், தமிழ்த் தேசத்தின் பொருளாதார வாழ்வு சீர்குலைக்கப்பட்டது.

தேசிய ஒடுக்குமுறையால் தமிழ்ப் பெண்ணினம் எதிர் கொள்ளும் துன்ப துயரங்கள் ஒருபுறமிருக்க, கலாசார சித்தாந்த அமைப்பிலிருந்து எழும் குரூரமான சமூக ஒடுக்குமுறைகளுக்கும் அவர்கள் ஆளாகவேண்டியிருக் கிறது. இச்சமூக ஒடுக்குமுறைகள் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

**சுரண்டப்படும் தொழிலாளிகளாகப் பெண்கள் ;**

தமிழ்த் தேசிய இன அமைப்பை எடுத்துக் கொண்டால், பெருந்தோட்டத்துறையிலும் விவசாயத் துறையிலும் தமிழ்ப் பெண்ணினம் மிக மலிவான


உழைப்புச் சக்தியாக மிக மோசமான முறையில் சுரண்டப் பட்டு வருவதைக்காணலாம். தோட்டத்துறையில் வேலைப் பளுமிக்க, காலத்தை விழுங்கும் (தேயிலை பறிக்கும்) கடினமான தொழிலைப் பெண்கள் மேற்கொள்கின்றனர். அவர்களது உற்பத்தித்திறன் அதிகமாக இருந்தபோதும் ஆண்களைவிடக் குறைவான ஊதியமே அவர்களுக்குக் கிடைக்கிறது. வட, கிழக்கு மாகாணங்களைப் பொறுத் தவரை ஒடுக்கப்படும் சாதிகளைச் சேர்ந்த பெண்கள் தமது மலையகச் சகோதரிகளைப் போன்று மிக மோசமான சுரண்டல் முறைக்கு ஆளாகியிருக்கின்றனர். நெல் வயல்களில் நடவுசெய்தல், களைபிடுங்கல், அறுவடை செய்தல் மற்றும் நெல் குத்தல் போன்ற கடுமையான வேலைகளில் ஈடுபடும் இப்பெண்கள் ஆண்களைவிட மிகக் குறைந்த கூலியையே பெறுகின்றனர். பெண்களால் செய்யப்படும் இந்த வேலைகளுக்கு 'பெண்களுடைய வேலை' என முத்திரை குத்தப்படுகிறது. அத்தோடு பெண்களுடைய வேலை என்ற ரீதியில் சில குறிப்பிட்ட தொழில்கள் இழிவு செய்யப்பட்டு, எந்தச் சமூக முக்கியத் துவமும் இல்லாதவையாகக் கருதப்படுகிறது. அதுமட்டு மின்றி இவ்விதமான தொழில்களில் பெண்களுக்கு எவ்வித மான மாற்றமோ, முன்னேற்றமோ ஏற்படப் போவ தில்லை.

பெருந்தோட்டப் பெண் தொழிலாளிகளாகிய எமது சகோதரிகள் நவ-காலனித்துவ பொருளாதாரச் சுரண் டல் முறைக்கும், திட்டமிட்ட இனவாதத் தாக்குதலுக் கும், ஆழமாக வேரூன்றியுள்ள சமூக ஒடுக்கு முறைகளுக் கும் ஆளாகியுள்ளனர். தேயிலைத் தோட்டங்களில் எமது பெண்கள் தினமும் எட்டு அல்லது ஒன்பது மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்கிறார்கள். தேயிலை பறிப்பது, தொழிற்சாலைகளில் தேயிலையைத் தரம்பிரித்து உலர வைப்பது, இப்படியாக மிகக் கடினமான வேலைகளை மேற் கொள்ளும் தமிழ்ப் பெண் பாட்டாளிகள் ஆண்களைவிட



ஈவிரக்கமற்ற சுரண்டலுக்கு இலக்காகியுள்ள மலையகப்பெண் தொழிலாளர்

மிகக் குறைந்த கூலிக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவ்விதம் சமூக உற்பத்தியில் தினமும் நீண்ட நேரத்தை செலவிடுவதோடு சமைத்தல், குழந்தைகளைப் பராமரித்தல், விறகு பொறுக்குதல், தண்ணீர் கொண்டு வருதல் இப்படியாக வீட்டு வேலைகளின் முழுப் பொறுப்பும் பெண்கள் மீதே சுமத்தப்படுகின்றன. இத்தோட்டப் பாட்டாளிப் பெண்



ஒடுக்கப்படும் கூலிப்பெண் தொழிலாளர்கள் வயல்களில் வாடுகிறார்கள்.

கள் பெரும்பாலும் கல்வி அறிவு இல்லாதவர்கள். பள்ளிக்குச் செல்பவர்களும் ஆரம்பப்பள்ளியைத் தாண்டுவதில்லை. பிரசவத்தில் இறக்கும் தாய்மார்களின் எண்ணிக்கையோ அதிகம். சுருங்கச் சொல்லப்போனால் மலையகத்

தமிழ்ப் பெண்கள் பொருள் உற்பத்தியில் மிக மோசமாகச் சுரண்டப்படுவதுடன், வீட்டிலும் அடிமை வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இதே போன்று, வட, கிழக்கில் ஒடுக்கப்படும் சாதிகளைச் சார்ந்த பெண்கள் மிகக் கடின மான உழைப்பாளிகளாக, செல்வத்தைப் படைப்பவர் களாக, உழைப்புச் சக்தியை மறு உற்பத்தி செய்பவர்களாக இருந்தபோதும் கல்வியறிவு அற்றவர்களாக, பொருளுற் பத்தியில் மிகவும் சுரண்டப்படுபவர்களாக, சமுதாயத்தில் கொடூரமாக ஒடுக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள்.

**வீட்டு ஊழியம்**

தமிழ்ப்பெண்களின் சமூக ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாக விளங்குவது வீட்டு ஊழியமாகும். வீட்டு ஊழியம் என்பது ஒரு தொழில் முறை. இத்தொழிற் பாட்டில் நீண்ட நேரத்தை விழுங்கும் சமையல் வேலை, அடுப்புச்சூட்டில் சதாகிடந்து அவதியுறல், குழந்தைகளைப் பேணுதல் போன்ற பல வேலைகள் அடங்கும். பெண்களை வீட்டுக்குள்ளே சிறை வைத்து, அவர்களின் எல்லையற்ற சக்தி நேரத்தை விழுங்கி, சமையல் அறையிலும்குழந்தைப் பராமரிப்பிலும் அவர்களைத் தளையிட்டுப் பிணைக்கும் கொத்தடிமைத்தனமே இதுவாகும். சலிப்பூட்டுகின்ற, அற்பமான இந்தப் பணிகளின் தன்மை சிந்தனையையும் சிருஷ்டித்திறனையும் மழுங்கடித்து விடக்கூடியதாகும். "உயிரியற் தொழிற்பாடு", "அவளுக்கென்று விதிக்கப் பட்டவேலை", "அவளுடைய இயல்பான குடும்பப்பணி" "அவளுடைய கர்மம்" என்ற தத்துவார்த்தப் போர் வைகளின் கீழ் ஆண்களுக்கும் குழந்தைகளுக்கும் பணி விடை செய்து பெண்கள் மாள்கிறார்கள். பெண்களின் குடும்ப ஊழியம் என்பது நிரந்தரமானதும், மாற்றியமைக் கப்பட முடியாததும் என்ற கருத்தினை இவை விதைத்துச் செல்கின்றன. சமுதாய உற்பத்திக்கான பணியோடு வீட்டு ஊழியமும் சேர்ந்து கொண்டு பெண்களின் மீது இரட்டைப்பளுவைச்சுமத்துகிறது; இருமுனைகளில்



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

ஒடுக்குமுறையைத்திணிக்கிறது. ஒரு மனித ஜீவி என்ற வகையில் தனிப்பட்ட ஆளுமையை வளர்த்தெடுப்பதற்கோ அல்லது நாட்டின் சமுதாய—அரசியல் வாழ்க்கையில் காத்திரமான பங்களிப்பினை வழங்குவதற்கோ நேரத்தையோ வாய்ப்பையோ இவை வழங்குவதில்லை.

**சீதனம்: பெண்களைச்சிறுமைப்படுத்தும் ஒரு நடைமுறை**

திருமணங்களில் சீதனம் கொடுக்கும் நடைமுறையானது இல்லம் என்ற சாம்ராஜ்யத்தில் 'வீட்டடிமை'யாக பெண்கள் நடத்தப்படுவதுடனும், பொருளாதார ரீதியிலும் சமுதாய ரீதியிலும் ஆண்களைச் சார்ந்துவாழ வேண்டிய நிர்ப்பந்தத்துடனும் இறுகப்பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளது. கோட்பாட்டளவில், சீதனம் என்பது பெண்களுக்குரியதாகக் கருதப்படுகிறது; தொழில் எதுவும் செய்யாத நிலையில், கணவனின் வருவாயிலேயே வாழவேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் பெண்ணுக்கு சீதனமானது சுதந்திரமான ஒரு வருமானமாகக் கொள்ளப்படுகிறது. இரண்டாவதாக, பொருளாதார ரீதியில் பலம் உள்ளவராயும் மனைவியையும் குழந்தையையும் பராமரிக்கக் கூடியவருமான திறமையான ஒருவரைக்கண்டறிவதற்கான ஒரு வழியாகவே சீதனம் கருதப்படுகிறது. ஆனால், சீதனம் கொடுக்கும் வழக்கமானது இந்தச் சமுதாயத்தைப்பற்றியும், இந்த சமுதாயத்தில் பெண்களின் நிலைமையைப் பற்றியும் நமக்கு நிறைய தகவல்களைத் தருகிறது.

செல்வம் மிகுந்த சாதிகளதும் வர்க்கங்களதும் நடைமுறையில், ஒரு திருமணத்தின்போது வழங்கப்படும் சீதனமானது, சுரண்டுகின்ற சாதிகளினதும் வர்க்கங்களினதும் சமூக, அரசியல் வலிமையின் தளத்தை ஸ்திரப்படுத்துவதற்காக, ஒரு மகளுக்கூடாக ஒரு குடும்பத்திலிருந்து இன்னுமொரு குடும்பத்திற்கு மூலதனம் என்பதனை காணி, சொத்து, நகை, பணம் என்பனவற்றிக்கூடாக கைமாற்றும் வழிமுறையாகும். செல்வமும் சொத்துட

மையும் சமூக, அந்தஸ்தின் சின்னமாக அங்கீகரிக்கப் பட்டிருக்கும் இன்றைய சமுதாயத்தில் சீதனம் வழங்கும் முறையானது சீழ் வடியும் புண்ணைப் போன்று தனது நச்சுத் தன்மையை மத்தியதர, நசுக்கப்பட்ட சாதிகளினதும் வர்க்கங்களினதும் மத்தியிலேயும் பரப்பிவருகிறது. இந்தச் சுரண்டப்படும் குடும்பங்கள் செல்வத்தைத்திரட்டு வதற்கும் அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்கும் சீதனத்தையே வழிமுறையாகக் கொள்கின்றன.

சீதனம் என்னும் இந்த நடைமுறையானது குடும்பங்களைத்தாங்கொணுத வறுமையிலும் கடனிலும் மூழ்கடித்துவிடுகிறது; திருமணம்பற்றிய திட்டங்களைக் குலைக்கிறது; தங்களின் சகோதரிகளைக் கரை சேர்ப்பதற்காகப் போதுமான சீதனக்காசு சேரும்வரை இளைஞர்களின் மணவாழ்விற்கான வயதின் எல்லையைத்தள்ளிப் போடுகிறது; சில சமயங்களில் தங்களின் சகோதரிகளுக்கு சீதனம் கொடுப்பதற்காகவே அவர்கள் திருமணம் செய்து கொள்ளவும் நிர்ப்பந்திக்கிறது. இச்சீதன நடைமுறையின் குரூரத்தாக்குதலுக்கு பெண்களே இலக்காகிறுர்கள்; இரையாகிறுர்கள்.

திருமணத்தின் போது சீதனம் வழங்குவதானது பெண்கள் பொருளாதாரரீதியில் தமது கணவரில் தங்கி நிற்க வேண்டியிருப்பதை அனுமானம் செய்து கொள்கிறது. இவர்கள் சமூகரீதியிலும் தங்களது கணவன்மாரது அந்தஸ்து வழியாகவே தமது அந்தஸ்தையும் பெறுகின்றனர். தனது சுயமான தனித்துவம், தனது பொருளாதார சுதந்திரம், தனது சமூக அங்கீகாரம் என்பனவற்றிற்கு மாருக தமது கணவர், குடும்பத்திற்கூடாகவே வாழ்க்கை அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அளவுக்கு பெண்கள் தரமிறக்கப்படுகிறுர்கள். சீதனம் பெண்களின் தரத்தைக்குறைக்கிறது; அவர்களைக் கேவலப்படுத்துகிறது. ஏனெனில், பெண்களின் மண வாழ்க்கையின் சௌந்தரியங்களை சீதனத்தொகையின்

அளவு தான் நிர்ணயம் செய்கிறது. சீதனம் இல்லாமல் பெண்கள் திருமணம் முடிக்கும் சந்தர்ப்பங்கள் மிக அருமையே.

ஒரு பெண் ஆனவள் தனக்கென சுயமான விருப்புகளும் ஆற்றல்களும் கொண்ட—சிந்திக்கத்தெரிந்த, ஆசாபாசங்கள் கொண்ட, உணர்வுபூர்மான மனிதஜீவி என்று நோக்கப்படுவதேயில்லை. திருமணத்திற்கூடாக சொத்து, சுகம் கொண்டு வருபவளாகவே அவள் கருதப் படுகிறுள். ஒரு பெண்ணின் அழகு, வயது, கற்பு, ஜாதகப் பொருத்தம், சமயம், சாதி போன்ற பிறபோக்கு அம்சங்களையும் மேவிக்கொண்டு அவளுடைய திருமணத் தினை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக சீதனமே அமைகிறது என்பது தான் உண்மை. வேறு வார்த்தை களில் சொல்வதாஞல், ஒரு திருமணத்தின் போது பெண்ணின் பெறுமதி என்பது சீதனத்தொகையின் அளவிஞல் தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது பெண்ணைத்தாழ்த்துவதும் கேவலப்படுத்துவதும் ஆகும்.

ஆக, சீதனம் என்பது பரந்து பட்ட சமுதாயத்தில் ஊன்றிப்போன மனப்பாங்குகளைப் பிரதிபலிப்பதாகும். ஆடுமாடுகளைச் சந்தையிலே பேரம் பேசி விற்பனை செய்வது போல ஜனத்தொகையின் சரிபாதியினரான பெண்களைப் பண்டமாற்றுக்கு விடுவதை அனுமதிக்கின்ற, அதில் பங்கு கொள்கின்ற, அதனை நிலைப்படுத்த முனைகின்ற அதஞேடு மோதுகின்ற ஒரு சமுதாயத்தின் பிரதிபலிப்பே இது. ஆயிரக்கணக்கான இளம்பெண்களை விரக்திக்கும் வெறுப்புக்கும் இட்டுச்செல்லும் ஒரு அமைப்பு இது. தங்களின் பெண்களுக்கு சீதனம் வழங்க முடியாத நிலையில் அப்பெற்ருேர்கள் அவர்களைத் தனிமைச் சிறையிலே தள்ளிவிடுகிறுர்கள். வேலையும் இல்லாத நிலையில் தங்கள் குடும்பத்திற்கு தாங்கள் நிரந்தரச்சுமை என்றும், குடும்பத்தைப் பிடித்த சாபக்கேடு என்றும் உணர்த்தப்படுகிறுர்கள். பெண்களுக்கு எதிரான பலாத்

காரத்திற்கு சீதனமே வழிவகுக்கிறது. சில சந்தர்ப்பங்களில் பெண்கள் தற்கொலை செய்து கொள்வதற்கும் இது துணை போகிறது.

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

தேசிய இன ஒடுக்குமுறை ஒருபுறமும், சமூகக் கட்டுப்பாடுகள் மறுபுறமுமாக தமிழ்ப் பெண்கள் பல்வேறு பரிமாணங்களால் நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் இந்நூலின் இரண்டாம் பகுதியில் சுருக்கமாகப் பார்த்தோம். இவ்விதம் தேசிய ரீதியிலும், சமூக ரீதியிலுமாக தமிழ்ப் பெண்ணினம் இரு துருவ ஒடுக்குமுறைக்கு ஆளாகி அவதியுறுவதால், அவர்களது விடிவு தேசிய விடுதலையிலும் சோஷலிசப் புரட்சியிலும் தான் தங்கியிருக்கிறது. எனவே தேசிய சுதந்திரப் போரிலும் சமூகப் புரட்சியிலும் பெண்களின் பங்கு முக்கியமாகிறது.

சகல தேசியப் போராட்டங்களும் வெகுசனப்போராட்டங்களாகும். வெகுசன விரக்தியின் எழுச்சியாகவே இப்போராட்டங்கள் வெடிக்கின்றன. இரு தேசிய இனங்கள் மத்தியில் எழும் நெருக்கடியே இப்போராட்டங்களில் நிலவும் பிரதான முரண்பாடாகும். அதாவது, ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோருமாய் உள்ள இரு தேசிய சமூகங்கள் மத்தியில் எழும் முரண்பாடு. வர்க்கப் போராட்டத்திற்கு மேலோங்கியதாக விரிவுகொள்ளும் தேசியப் போராட்டங்களில் பரந்துபட்ட வெகுசனங்கள் அதாவது, ஒரு தேசத்தின் சகல மக்களுமே அணிதிரட்டப்படுகின்றனர். ஏனெனில், இப்போராட்டங்கள் தேசியத் தன்மை கொண்டன. புரட்சிகர சோஷலிச கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் செயற்படும்போது, இத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வர்க்கப்போராட்டத்துடன் இணைந்ததாக ஒருமுகப்படுத்தப்படுகின்றன. இதன் நோக்கம் தேசிய விடுதலையுடன் புரட்சிகரமான சமுதாய மாற்றத்தையும் கொண்டு வருவதாகும். அந்நிய ஆதிபத்தியத்தினால், சமூகக் கட்டுப்பாடுகளினால் எழும்

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

ஒடுக்குமுறை அமைப்புகளிலிருந்து பெண்ணினம் பூரண விடுதலை பெறுவதாயின் இத்தகைய ஒரு வேலைத்திட்டமே சிறந்ததாகும். மூன்றாவது உலக நாடுகளில் தலை தூக்கியிருக்கும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வர்க்கப் போராட்டங்களை உள்ளடக்கியதாகவே அமையப்பெற்றிருக்கின்றன. இப் போராட்டங்களில் பெண்களும் தீவிரமாகப் பங்கு கொண்டதால், அவை தேசிய ரீதியிலும் சமூக ரீதியிலும் பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ள முடிந்தது.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் இன்று ஒரு புதிய திருப்பத்தை அடைந்துள்ளது. சிங்கள இன ஒழிப்பு, பயங்கரவாத அட்டூழியங்கள் காரணமாக தமிழீழத்தில் ஒரு புரட்சிகரமான சூழ்நிலை பிறந்திருக்கிறது. ஆயுதந் தாங்கிய எமது போராட்டம் விரிவடைந்து வெகுசன ஆயுதப் போராட்டமாக விசாலமடையும் காலகட்டம் அண்மித்துள்ளது. இந்தப் போராட்ட சூழ்நிலையில் பெண்களின் பங்களிப்பு, அவர்களது தீவிரமான ஈடுபாடு என்பன அத்தியாவசியமாகின்றன.

தமிழீழ அரசியற் போராட்ட வரலாற்றில் பெண்கள் தமது பங்களிப்பைச்செய்யத் தவறவில்லை. அறுபதின் ஆரம்பத்தில் வெடித்துக்கிளம்பிய அமைதிவழிப் போராட்டங்களில் பெண்ணினம் பெருந்திரளாய்ப் பங்கேற்றது. ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்களாய் தேசிய ரீதியில் வெகுசனத்தை ஈர்த்த சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஆண்-பெண் வேறுபாடின்றி முழுத் தேசமும் எழுச்சி கண்டது. சுதந்திரம் என்ற இலட்சியப் பாதையில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகப் போராட்டகளத்தில் குதித்தனர். தேசாபிமானத்தில், தேசியப் பற்றுணர்வில் ஆண்களைவிடத் தாம் எவ்விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்பதைத் தமிழீழப் பெண்ணினம் நிரூபித்துக்காட்டத்தவறவில்லை.

அமைதிவழி தழுவிய அகிம்சைப் போராட்டங்கள் ஆயுத பலாத்காரத்தால் அடக்கியொடுக்கப்பட்டதால், புரட்சிகர ஆயுத எதிர்ப்பாக எமது போராட்டம் வளர்ச்சியும், முதிர்ச்சியும் கண்டுள்ளது. இப்போராட்டத்தின் வெற்றி வெகுசனத்தின் முழுமையான பங்களிப்பிலேயே தங்கியிருக்கிறது. இந்த ரீதியில் சனத்தொகையில் சரிபாதியும், வெகுசனத்தின் மூலதளமுமாகிய பெண்ணினத்தின் பங்கேற்பு தமது புரட்சிப் போராட்டத்தை ஆழமாக்கி விரிவாக்கம்செய்யும். பெண்களின் பங்களிப்பே எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு பரந்துபட்ட தேசியத்தன்மையை, முழுமையைக் கொடுக்கும். பெண்களின் பங்களிப்பானது தேசிய சுதந்திரப் போரை முன்னெடுத்துச் செல்வதுடன், பெண்களின் பிரக்ஞையில் புரட்சிகர விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கை நிலைகளில் புதிய மாற்றங்களைக் கொண்டுவரும். எமது போராட்ட இலக்குகளாகிய தேசிய சுதந்திரமும் சமூகப் புரட்சியுமே தமிழ்ப் பெண்ணினத்தின் விடிவிற்கான பாதை. எமது பெண்களை சதா நசுக்கிக் கொண்டிருக்கும் சகல ஒடுக்குமுறை அமைப்புகளையும் உடைத்தெறிந்து, அவர்களது சமத்துவத்திற்கும், சுபீட்சத்திற்கும் வழிகோலும் ஒரே மார்க்கம் சோசலிச தமிழீழத்தனியரசேயன்றி வேறொன்றுமல்ல. எனவே, ஒரு உறுதியான கொள்கைத் திட்டத்துடன், உருப்படியான போராட்டப் பாதையை வரித்து, மக்கள் ஆதரவுடன் தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரளுமாறு அன்புச் சகோதரிகள் அனைவருக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம்.

(இப் பிரசுரம் பெண்கள் விடுதலைபற்றிய ஒரு அறிமுக நூலாக வெளியிடப்படுகிறது. பெண்கள் பிரச்னையில் எமது விரிவான அணுகுமுறைகள், தீர்வுகள் பற்றிய விளக்கங்கள் எமது இயக்கத்தின் கொள்கைத் திட்ட விஞ்ஞாபனத்தில் தரப்பட்டுள்ளது. இவ்விஞ்ஞாபனம் விரைவில் பொது மக்கள் மத்தியில் விநியோகமாகும்.)

## REFERENCES


1. LENIN. V. *'Women and Society' in* THE WOMAN QUESTION. *page 43*
2. LENIN. V. *On the Emancipation of Women. page 110.*
3. STONE. E. *Women and the Cuban Revolution. page 12.*
4. STONE. E. *Women and the Cuban Revolution. page 8.*
5. P.F.L.P. *Bulletin No 61 April 1982.*
6. P.F.L.P. *Bulletin No 61 April 1982.*
7. P.F.L.P. *Bulletin No 61 April 1982.*
8. P.F.L.P. *Bulletin No 61 April 1982.*
9. RANDALL. M. *Sandino's Daughters. page 66*
10. STONE. E. *Women and the Cuban Revolution. page 8.*
11. RANDALL. M. *Sandino's Daughters. page 56.*
12. DAVIES. M. *Third World Second Sex. page 85.*
13. DAVIES. M. *Third World Second Sex. page 86.*
14. DAVIES. M. *Third World Second Sex. page 78.*


## BIBLIOGRAPHY


BENDT. I & DOWNING. J — *We Shall Return.* Women of Palestine Zed Press 1982.

BERNSTEIN. H. — *For Their Triumph and Their Tears.* Women In Apartheid South Africa. International Defence and Aid Fund Publication 1975.

DAVIES. M — *Third World Second Sex.* Women's Struggle and National Liberation. Zed Press 1983.

KIMBLE. J & UNTERHALTER. E — 'We Opened the Road For You, You Must Go Forward' A.N.C Womens Struggle 1912-1982. Feminist Review No 12.

KURIAN. R — *Women Workers In the Sri Lankan Plantation Sector.* International Labour Organisation 1982.

LENIN. V — *On The Emancipation of Women.* Progress Publication 1977.

NATIONAL UNION OF ERITREAN WOMEN — *Women and Revolution in Eritrea.*

*Women in Eritrean Struggle.*

POPULAR FRONT FOR THE LIBERATION OF PALESTINE — *Bulletin No 61 April 1982.*

RANDALL. M — *Sandino's Daughters.* Testimonies of Nicaraguan Women in Struggle. Zed Press 1982.

SKJONSBERG. E. — *A Special Caste.* Tamil Women in Sri Lanka. Zed Press 1982.

STONE. E — *Women and the Cuban Revolution.* Path Finder Press. New York 1981.

SPARE RIB — No. 81 April 1979.

SPARE RIB — No. 83 June 1979.

INTERNATIONAL PUBLISHERS — *The Woman Question* Selections from the Writings of Marx, Lenin, Stalin, Engels.

WARD. M — *Unmanageable Revolutionaries* Women and Irish Nationalism. Pluto Press 1983.



க. குகனேந்திர
பூநாறி மரத்
கொக்குவி

## எமது பிற வெளியீடுகள்

1. *சோஷலிசத் தமிழீழத்தை நோக்கி... (நவம்பர் 1979)*

2. *இனவெறிப்பிடிக்குள் ஈழத்தமிழினம் (ஜனவரி 1981)*

3. *அரசபயங்கரவாதமும் ஆயுதப்புரட்சியும் (ஏப்ரல் 83)*

4. **Liberation Tigers and Tamil Eelam Freedom Struggle (English) Aug. 1983**

5. **Women and Revolution The Role of Women in Tamil Eelam National Liberation Struggle (English) November 1984**

6. **சோஷலிசத்தத்துவமும் கொரில்லா யுத்தமும் (பெப்ரவரி, 1984)**

